பேராசிரியர்

திருமணம் செல்வக் கேசவராய முதலியார்

பயன்படுத்திய இந்நூல்

அவர்கள்தம் பேரன் திருவாளர்

தி நம்பிராசன் அவர்களால்

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு

அன்பளிப்பாக

வழங்கப்பெற்றது.

நாலடிநானூற்றின்மூலம்.

இஃது

[illegible] சேர்த்தும், பலவாறுபதித்தும்

நேரிட்ட

எழுத்து-பொருள்-குற்றமுதலியவற்றையும்

விலக்கி

யாவர்க்கு முபயோகமாகும்படி,

சென்னைமா நகரத்து

உபாத்தியாயர் முதலிய பலரும் கேட்டுக்கொண்டதால்,

காஞ்சிபுரம்

லக்ஷ்மண முதலியாரால்

கிருத்தி

திராவிடதீபிகை அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இஃது

ஸ்ரீ கங்காதரநாயகரால் நிறைவேறியது.

சாலிவாகன[illegible]ல் நிகழ்கின்ற சோபகிருது [illegible]மீ

இதன் விலை ரூ-௧. 1843

சிந்தாதிரிபேட்டை.

நாலடி நானூறு.

கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால் - - *
கானிலந் தோயாக்கடவுளை யாநிலம் - - - *
சென்னியுறவணங்கிச்சேர்துமெம்முள்ளத்து - *
முன்னியவைமுடிகவென்று. - - - - - *

இப்புத்தகம்,

ஸ்ரீ.

வெங்கடாசல முதலியாரால்

அச்சிடப்பட்டது.

நாலடிநானூறு

அதிகாரவரிசை

முற்றும்.

நாலடி நானூற்றகராதி

அதி.	கவி.	அதி.	கவி.

உ

[illegible] கல் [illegible] கல்.

ஞா

ஓடு, கலி. ஏடு, கலி.

நாலடிநானூற்றகராதி

முற்றிற்று.

நாலடி நானூறு

அறத்துப்பால்.

செல்வநிலையாமை.

அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட
❋
மறுசிகைநீக்கியுண்டாரும்வறிஞராய்ச் ❋
சென்றிரப்பரோரிடத்துக்கூழெனிற்செல்வமொன் ❋
றுண்டாகவைக்கற்பாற்றன்று. (௧)
துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப் ❋
பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க ❋
வகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வம் ❋
சகடக்கால்போலவரும்.
யானையெருத்தம்பொலியக்குடைநிழற்கீழ்ச்
சேனைத்தலைவராய்ச்சென்றோருமேனை
(௨)
❋ வினைபுலப்பவேறாகிவீழ்வர்தாங்கொண்ட
❋ மனையாளைமாற்றார்கொளர்.

※

(௮)

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்

※ தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க

※ சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்

※ வந்தது வந்தது கூற்று.

(௯) என்னுமொன் றுதங்கையுறப் பெற்றக்கால்

※ பின்னுவதென் றுபிடித்திரா முன்னே

※

கொடுத்தாருயப் போவர் கோடிறீக் கூற்றம்

தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

※

(௧) உ செல்வநிலையாமை.

இழைத்தநாளெல்லை யிகவாபிழைத்தொரீஇக் ※

கூற்றங்குதித்துய்ந்தாரீங்கில்லை யாற்றப் ※

பெரும்பொருள்வைத்தீர்வழங்குமினளைத் ※

தழீஇந்தழீஇந் தண்ணம்படும். (௬)

தோற்றஞ்ஞான்ஞாயிறு நாழியாவைகலும் ※

கூற்றமளந்துநந் நாளுண்ணு மாற்ற

அறஞ்செய்தருளுடையீராகுமின்யாரும்

※

※

பிறந்தும்பிறவா தாரில்.

(௭)

செல்வர்யாமென்றுதாஞ்செல்வழியெண்ணாத
புல்லறிவாளர்பெருஞ்செல்வமெல்லில்
❊

❊
கருங்கொண்மூவாய்திறந்த மின்னுப்போன்றன்றி
மருங்கறக்கெட்டுவிடும். (௮)

உண்ணானொளிநிறானோங்குபுகழ்செய்யான் ❊
துன்னருங்கேளிர்துயர்களையான்கொன்னே ❊
வழங்கான்பொருள்காத்திருப்பானேல்அஆ ❊
இழந்தானென்றெண்ணப்படும். (௯)

உடாஅதுமுண்ணாதுந்தம்முடம்புசற்றும்
கெடாஅதநல்லறமுஞ்செய்யார்கொடாஅது
❊
❊

வைத்தீட்டினரிழப்பர்வான்றோய்மலைநாட

❊

உய்த்தீட்டுந்தேனீக்கரி.

செல்வநிலையாமை முற்றிற்று.

(௰)

இளமைநிலையாமை.

நரைவருமென்றெண்ணி நல்லறிவாளர் *
குழவியிடத்தே துறந்தார் புரைதீரா *
மன்னுவிளமைமகிழ்ந்தாரே கோலூன்றி *
இன்னாங்கெழுந்திருப்பார். (௧)

நட்புநாரற்றன நல்லாருமஃகினார் *
அற்புத்தளையுமவிழ்ந்தன வுட்காணாய்
* வாழ்தலினூதியமென்னுண்டாம்வந்ததே
* ஆழ்கலத்தன்னகலி.

(௨)

சொற்றளர்ந்து கோலூன்றிச்
சோர்ந்த நடையினரா
பற்கழன்றுபண்டம்பழிகாறுமிற்செறிந்து
[ய்ப் காமநெறிபடருங்கண்ணினார்க்கில்லையே
ஏமநெறிபடருமாறு.
(௩)

தாழாத்தளராத்தலைநடுக்காத்தண்டூன்றா
வீழாவிறக்குமிவண்மாட்டுங்காழிலா
மம்மர்கொண்மாந்தர்க்கணங்காகுந்தன்கைக்கோல்
அம்மனைக்கோலாகியஞான்று. (௪)

எனக்குத்தாயாகியாளென்னையீங்கிட்டுத்
தனக்குத்தாய்நாடியேசென்றாடனக்குத்தா
யாகியவளுமதுவானாற்றாய்த்தாய்க்கொண்
டேகுமளித்திவ்வுலகு. (௫)

இளமை நிலையாமை.

வெறியயர்வெங்களத்துவேன்மகன்பாணி *
முறியார்நறுங்கண்ணிமுன்னர்த்தயங்க *
மறிகுளகுண்டன்னமன்றோமகிழ்ச்சி *
அறிவுடையாளர்கணில். (௬)

பனிபடுசோலைப்பயன்மரமெல்லாம் *
கனிமுதிர்ந்துவீழ்ந்தற்றிளமைநனிபெரிதும் *
வேற்கண்ணளென்றிவளை வெஃகன்மின்மற்றிவளுங்
கோற்கண்ணளாகுங்குனிந்து. (௭)

பருவமெனைத்துளபல்லின்பாலேனை

* இருசிகையுமுண்டோவென்று வரிசையால்

*

உண்ணாட்டங்கொள்ளப்படுதலால்யாக்கைக்கோள் *
எண்ணுறறிவுடையார். (௮)

மற்றறிவாநல்வினையாமிளையமென்னாது *
கைத்துண்டாம்போழ்தேகரவாதறஞ்செய்ம்மின் *
முற்றியிருந்தகனியொழியத்தீவளியால் *
நற்காயுதிர்தலுமுண்டு. (௯)

ஆட்பார்த்துழலுமருளில்கூற்றுண்மையால் ※
தோட்கோப்புக்காலத்தாற் கொண்டுய்ம்மின்பீட்பி
பிள்ளையைத்தாயலறக்கோடலான்மற்றதன் [துக்கிப்
கள்ளங்கடைப்பிடித்தனன்று. (௰)

இளமைநிலையாமை முற்றிற்று.—அதி. உ௰.

யாக்கைநிலையாமை. ௩

மலைமிசைத்தோன்றுமதியம்போல்யானைத்
தலைமிசைக்கொண்டகுடையர் நிலமிசைத்
※
※
துஞ்சினரென்றெடுத்துத்தூற்றப்பட்டாரல்லாலீ
※
எஞ்சினாரிவ்வுலகத்தில். (௧)

வாழ்நாட்கலகாய்வயங்கொளிமண்டிலம்

வீழ்நாள் படாஅ தெழுதலால் வாழ்நாள்
உலவாமுன் ஒப்புரவாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.
(௨)

மன்றங் கறங்க மணப்பறை யாயின

அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோமாறே

வலிக்குமாம் மாண்டார் மனம்.

(௩)

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து. (௪)

கணங்கொண்டுசுற்றத்தார்கல்லென்றலறப் [டீண்
பிணங்கொண்டுகாட்டுய்ப்பார்க்கண்டுமணங்கொண்
டுண்டுண்டுண்டென்னுமுணர்வினாற்சாற்றுமே *
டொண்டொண்டொடென்னும்பறை. (௫)

௩. யாக்கைநிலையாமை.

நார்த்தொடுத்தீர்க்கிலெனன்றாய்ந்தடக்கிலென் *
பார்த்துழிப்பெய்யிலென்பல்லோர்பழிக்கிலென் *
தோற்பையுணின்றுதொழிலறச்செய்தூட்டும்
* கூத்தன்புறப்பட்டக்கால்.

(௬)

படுமழைமொக்குளிற்பல்காலுந்தோன்றிக் *
கெடுமிதோர்யாக்கையென்றெண்ணித்தடுமாற்றம் *
தீர்ப்பேம்யாமென்றுணருந்திண்ணறிவாளரை
* நேர்ப்பார்யார்நீணிலத்தின்மேல்.

(௭)

யாக்கையையாப்புடைத்தாப்பெற்றவர்தாம்பெற்ற
❊ யாக்கையாலாயபயன்கொள்கயாக்கை
❊
மலையாடுமஞ்சுபோற்றோன்றிமற்றாங்கே
நிலையாதுநீத்துவிடும்.
❊
(அ)

புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி ❊
இன்னினியேசெய்கவறவினையின்னினியே ❊
நின்றானிருந்தான்கிடந்தான்றன்கேளலறச் ❊
சென்றானெனப்படுதலான். (௯)

கேளாதேவந்துகிளைகளாயிற்றோன்றி ❊
வாளாதேபோவரான்மாந்தர்கள்வாளாதே ❊
சேக்கைமரனொழியச்சேணீங்குபுட்போல ❊
யாக்கைதமர்க்கொழியநீத்து. (௰)

யாக்கைநிலையாமை முற்றிற்று.—அதி. ௩.

அறன்வலியுறுத்தல். ஸ்ரீ

அகத்தாரேவாழ்வாரென்றண்ணாந்துநோக்கிப்

❋

புகத்தாம்பெறாஅர்புறங்கடைபற்றி
மிகத்தாம்வருந்தியிருப்பரேமேலைத்
தவத்தாற்றவஞ்செய்யாதார்.

❋

❋

(௧)

ஆவாநாமாக்கநசைஇயறமறந்து ❋
போவாநாமென்னாப்புலைநெஞ்சேயோவாது ❋
நின்றுஞற்றிவாழ்தியெனினுநின்வாழ்நாள்கள் ❋
சென்றனசெய்வதுரை. (௨)

வினைப்பயன்வந்தக்கால்வெய்யவுயிரா ❋

மனத்தினழியுமாம்பேதைநினைத்ததனைத்

❋

தொல்லையதென்றுணர்வாரேதடுமாற்றத்
தெல்லையிகந்தொருவுவார்.

❋

(௩)

அரும்பெறல்யாக்கையைப்பெற்றபயத்தால்
பெரும்பயனுமாற்றவேகொள்கரும்பூர்ந்த
சாறுபோற்சாலவும்பின்னுதவிமற்றதன்
கோதுபோற்போகுமுடம்பு. (௪)

கரும்பாட்டிக்கட்டிசிறுகாலைக்கொண்டார்
துரும்பெழுந்துவேங்காற்றுயராண்டுழவார்
வருந்தியுடம்பின்பயன்கொண்டார்கூற்றம்
வருங்காற்பரிவதிலர். (௫)

௪ அறன்வலியுறுத்தல்.

இன்றுகொலன்றுகொலென்றுகொலென்னாது
பின்றையேநின்றதுகூற்றமென்றெண்ணி
ஒருவுமின்றீயவையொல்லும்வகையால்
மருவுமின்மாண்டாரறம். (௬)

மக்களாலாயபெரும்பயனுமாயுங்கால்
எத்துணையுமாற்றப்பலவானாற்றொக்க
உடம்பிற்கேயொப்புரவுசெய்தொழுகாதும்பர்க்
கிடந்துண்ணப்பண்ணப்படும். (௭)

உறக்குந் துணையதோராலம்வித் தீண்டி

*

இறப்ப நிழற்பயந்தாஅங் கறப்பயனும்
தான்சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால்

*

*

வான் சிறிதாப் போர்த்துவிடும்.

(அ)

வைகலும்வைகல்வரக்கண்டு மஃதுணரார் *
வைகலும்வைகலை வைகுமென் றின்புறுவர் *
வைகலும்வைகற்றம்வாழ்நாண்மேல்வைகுதல் *
வைகலைவைத்துணராதார். (௬)

மாநவருங்கல்நீக்கியிரவென்னும் *
ஈநவிளிஙிஞுல்வாழ்வென்மன் னீநத்தால்

*

ஊட்டியக்கண்ணுமுறுதிசேர்ந்திவ்வுடப்பு *
நீட்டித்து நிற்குமெனின். (௰)

அறன்வலியுறுத்தல்முற்றிற்று.—அ௬ சம.

ஞாக்கேழ்மடநல்லர்யென்றரற்றுஞ்சான்றவர் ❋
நோக்கார்கொளுய்யதோர்புக்கிலையாக்கைக்கோர் ❋
ஈச்சிறகன்னதோர்தோலறினும்வேண்டுமே ❋
காக்கைக்கடிவதோர்கோல்.

(க)

தோற்போர்வை மேலுந் துளையலவாய்ப்
பொய்ம்மை

[றைக்கும்
மீப்போர்வைமாட்சித்துடம்பானுன்மீப்போர்வை ❋
பொய்ம்மறையாக்காமம்புகலாதுமற்றதனைப் ❋
படம்மறியர்ப்பார்க்கப்படும்.

(உ)

தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப் ❋
பொய்க்கோலஞ்செய்யவொழியுமேயெக்காலும் ❋

உண்டிஷினைபுளுறைறக்குமெனப்பெரியோர்

※

கண்டுகைவிட்டமயல். (௩)

தெண்ணீர்க்குவளைபொருகயல்வேலென்று ※
கண்ணில்புன்மாக்கள்கவற்றவிடுவனே ※
உண்ணீர்களைந்தக்கானுங்குளுன்றிட்டன்ன ※
கண்ணீர்மைகண்டொழுகுவேன். (௪)

முல்லைமுகைமுறுவன்முத்தென்றிவைபிதற்றும் ※
கல்லாப்புன்மாக்கள்கவற்றவிடுவனே ※
எல்லாருங்காணப்புறங்காட்டுதிர்த்துக்க
பல்லென்புகண்டொழுகுவேன்.

※
(௫)

௰ தாய்தன்மை.

குடருங்கொழுவுங்குருதியுமென்பும் ❋
தொடருநரம்பொடுதோலுமிடையிடையே ❋
வைத்ததடியும்வழும்புமாமற்றிவற்றுள் ❋
எத்திறத்தாளீர்ங்கோதையாள். (௬)

ஊறியுவர்த்தக்கவொன்பதுவாய்ப்புலனும்

❋

கோதிக்குழம்பலைக்குங்கும்பத்தைப்பேதை
பெருந்தோளிபெய்வளாயென்னுமீப்போர்த்த

❋

❋

கருந்தோலாற்கண்விளக்கப்பட்டு.

(எ)

பண்டமறியார்படுசாந்துங்கோதையும்

❋

கொண்டுபாராட்டுவார்கண்டிலர்கொல்மண்டிப்

❋

பெடைச்சேவல்வன்கழுகுபேர்த்திட்டுக்குத்தும் ❋
உடைச்சிரகாடச்சிற்றாழி. (அ)

கழிந்தாரிடுதலைகண்டார்நெஞ்சுட்கக் ❊
குழிந்தாழ்ந்தகண்ணவாய்த்தோன்றியொழிந்தாரை
போற்றிநெறிநின்மினிற்றிதன்பண்பென்று [ப்
சாற்றுங்கொல்சாலச்சிரித்து. (௯)

உயிர்போயார்வெண்டலையுட்கச்சிரித்துச் ❊
செயிர்தீர்க்குஞ்செம்மாப்பவரைச்செயிர்தீர்ந்தார் ❊
கண்டிற்றிதன்வண்ணமென்பதனாற்றம்மையோர் ❊
பண்டத்துள்வைப்பதிலர். (௰)

தூய்தன்மைமுற்றிற்று—ஆக ௫௰.

துறவு. ௰௧

விளக்குப்புகவிருண்மாய்ந்தாங்கொருவன் ❊
தவத்தின்முன்னில்லாதாம்பாவம்விளக்குநெய் ❊
தேய்விடத்துச்சென்றிருள்பாய்ந்தாங்குநல்வினை ❊
தீர்விடத்துநிற்குமாந்தீது. (௧)

நிலையாமைநோய்மூப்புச்சாக்காடென்றெண்ணித் ❊
தலையாயார்தங்கருமஞ்செய்வார்தொலைவில்லாச் ❊
சத்தமுஞ்சோதிடமுமென்றாங்கிவைபிதற்றும் ❊
பித்தரிற்பேதையாரில். (௨)

இல்லமிளமையெழில்வனப்புமீக்கூற்றம் *
செல்வம்வலியென்றிவையெல்லாமெல்ல *
நிலையாமைகண்டுநெடியார்துறப்பர்
தலையாயார்தாமுய்யக்கொண்டு.
*
(௩)

துன்பம்பலநாளுழந்துமொருநாளை *
இன்பமேகாமுறுவரேழையாரின்பம் *
இடைதெரிந்தின்னாமைநோக்கிமனையா *
றடைவொழிந்தாரான்றமைந்தார். (௪)

கொன்னேகழிந்தன்றிளமையுமின்னே *
பிணியொடுமூப்பும்வருமாற்றுணிவொன்றி *
என்னொடுசூழாதெழுநெஞ்சேபோதியோ *
நன்னெறிசேரநமக்கு. (௫)

ஐட் துறவு.

மாண்டகுணத்தொடுமக்கட்பேறில்லெனினும் ❋
பூண்டான்கழித்தற்கருமையாற்பூண்ட ❋
மிடியென்னுங்காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார்கற்றறிந்தார். (௬)

ஊக்கித்தாங்கொண்டவிரதங்களுள்ளுடையத் ❋
தாங்கருந்துன்பங்கடாந்தலைவந்தக்கால்
நீக்கிநிறூஉமுரவோரே நல்லொழுக்கம்
❋
❋
காக்குந்திருவத்தவர்.
(௭)

தம்மையிகழ்ந்தமைதாம்பொறுப்பதன்றிமற்
❋ றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தாலும்மை
❋ எரிவாய்நிரயத்துவீழ்வர்கொலென்று
❋ பரிவதூஉஞ்சான்றோர்கடன்.
(௮)

மெய்வாய்கண்மூக்குச்செவியெனப்பேர்பெற்ற ❋
ஐவாயவேட்கையவாவினைக்கைவாய் ❋
கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடையான் ❋
விலங்காதுவீடுபெறும். (௯)

துன்பமேமீதூரக்கண்டுந்துறவுள்ளார் *
இன்பமேகாமுறுவரேழையாரின்பம் *
இசைதோறுமற்றதனின்னுமேநோக்கிப்
பசைதல்பரியாதாமேல்.

துறவு - முற்றும் — ஆக ௯௰.

*
(௰)

சினமின்மை. ௰௩

மூதித்திறப்பாருமிறக்கமதியா
மிதித்திறப்பாருமிறக்கமிதித்தேறி
* ஈயுந்தலைமேலிருத்தலாலஃதறிவார்
* காயுங்கதமின்மைநன்று.

*
(க)

தண்டாச்சிறப்பிற்றம்மின்னுயிரைத்தாங்காது *
கண்டுழியெல்லாந்துறப்பவோமண்டி *
அடிபெயராதாற்றவிளிவந்தபோழ்தின்

(௨)

காவாதொருவன்றன்வாய்திறந்துசொல்லுஞ்சொல் ※
ஓவாதேதன்னைச்சுடுதலாலோவாதே ※
ஆய்ந்தமைந்தகேள்வியறிவுடையாரெஞ்ஞான்றும் ※
காய்ந்தமைந்தசொல்லார்கறுத்து. (௩)

நேர்த்துநிகரல்லார்நீரல்லசொல்லியக்கால் ※
வேர்த்துவெகுளார்விழுமியோரோர்த்ததனை ※
உள்ளத்தானுள்ளியுரைத்துராஅயூர்கேட்பத் ※
துள்ளித்தூண்முட்டுமாங்கீழ். (௪)

இளையானடக்கமடக்கங்கிளைபொருள் ※
இல்லான்கொடையேகொடைப்பயனெல்லாம் ※
ஒறுக்குமதுகையுரனுடையாளன்
பொறுக்கும்பொறையேபொறை.
※
(௫)

கல்லெறிந்தன்னகயவர்வாயின்னுச்சொல்
எல்லாருங்காணப்பொறுத்துய்ப்பரொல்லை

*

*

இடுநீற்ருற்றைவிந்தநாகம்போற்றத்தம்
முடிமையானீவரதிக்கப்பட்டு.

*

(௬)

மாற்ருராய்நின்றுதம்மாறேற்பார்க்கேலாமை

*

ஆற்றுமையென்னுரறிவுடையாராற்றுமை
நேர்த்தின்னுமற்றவர்செய்தக்காற்றுமவரைப்
பேர்த்தின்னுசெய்யாமைநன்று.

*

*

(௭)

நெடுங்காலமோடினுநீசர்வெகுளி ✻
கெடுங்காலமின்றிப்பரக்குமடுங்காலை ✻
நீர்கொண்டவெப்பம்போற்றானேதணியுமே ✻
சீர்கொண்டசான்றோர்சினம். (௮)

உபகாரஞ்செய்ததனையோராதேதங்கண் ✻
அபகாரமாற்றச்செயினுமுபகாரம் ✻
தாஞ்செய்வதல்லாற்றவற்றினாற்றீங்கூக்கல்
வான்றோய்குடிப்பிறந்தார்க்கில்.

✻
(௯)

கூர்த்துநாய்கௌவிக்கொளக்கண்டுந்தம்வாயால் ✻
பேர்த்துநாய்கௌவினரீங்கில்லைநீர்த்தன்றிக் ✻
கீழ்மக்கள்கீழாயசொல்லியக்காற்சொல்லுவரோ ✻
மேன்மக்கடம்வாயான்மீட்டு. (௰)

சினமின்மை - முற்றிற்று.—ஆ ௭௰.

பொறையுடைமை ௰௫

கோதையருவிக்குளிர்வரை நன்னாட *
பேதையோடியாதுமுரையற்கபேதை *
உரைப்பிற்சிதைந்துரைக்குமொல்லும்வகையான் *
வழுக்கிக்கழிதலே நன்று.

(௯)

நேரல்லார் நீரல்லசொல்லியக்கான்மற்றது

*

தாரித்திருத்தறகுதிமற்றேரும்
புகழ்மையாக்கொள்ளாதுபோங்குநீ ஞாலம்
*
*

சமழ்மையாக்கொண்டுவிடும்.

(௨)

காதலார்சொல்லுங்கடுஞ்சொல்லுவந்துரைக்கும் *
ஏதிலாரின்சொலிற்றீதாமோபோதெலாம் *

மாதர்வண்டார்க்குமலிகடற்றண்சேர்ப்ப

* ஆவதறிவார்ப்பெறின்.

(௩)

அறிவதறிந்தடங்கியஞ்சுவதஞ்சி *
உறுவதுலகுவப்பச்செய்துபெறுவதனால் *
இன்புற்றுவாழுமியல்புடையாரெஞ்ஞான்றும் *
துன்புற்றுவாழ்தலரிது. (௪)

வேற்றுமையின்றிக்கலந்திருவர் நட்டக்கால், *
தேற்றாவொழுக்கமொருவன்கணுண்டாயின் *
ஆற்றுந்துணையும்பொறுக்கப்பொறானாயின் *
தூற்றாதேதூரவிடல். *
(௫)

௰ள பொறையுடைமை.

இன்னாசெயினுமினியவொழிகென்று *
தன்னையேதானோவினல்லது துன்னிக் *
கலந்தாரைக்கைவிடுதல்கானகநாட *
விலங்கிற்கும்விள்ளலரிது. (௬)

பெரியார்பெருநட்புக்கோடறாஞ்செய்த *
அரியபொறுப்பவென்றன்றோவரியரோ *

ஒல்லெனருவியுயர்வரை நன்னாட்
நல்லசெய்வார்க்குத்தமர்.

*

(எ)

வற்றிமற்றாற்றப்பசிப்பினும்பண்பிலார்க்

* கற்றறிவுயாயற்க வற்றம்

*

மறைக்குந்துணையார்க்குரைப்பவேதம்மைத்
துறக்குந்துணிவிலாதார்.

*

(அ)

இன்பம்பயந்தாங்கிழிவுதலைவரினும் *
இன்பத்தின்பக்கமிருந்தைதக்கவின்பம் *
ஒழியாமைகண்டாதுமோங்கருவிநாட *
பழியாகாவாறேதலை. (கூ)

தான்கெடினுந் தக்கார்கேடெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க வான்சவிந்த
வையகமெல்லாம்பெறினு முரையற்க *
பொய்யோடிடைமிடைந்தசொல். (௰)

பொறையுடைமை-முற்றிற்று—அஉ௰.

பிறர்மனைநயவாமை. ௰௭

அச்சம்பெரிதாலதற்கின்பஞ்சிற்றளவாம்
* நிச்சநினையுங்காற்கோக்கொ லையாலிச்சலும்
* கும்பிக்கேகூர்த்தவினையாற்பிறன்றாரம்
* நம்பற்கநாணுடையார்.
(௧)

அறம்புகழ்கேண்மைபெருமையிந்நான்கும்
பிறன்றாரநச்சுவார்ச்சேராபிறன்றாரம்

*

*

நச்சுவார்ச்சேரும்பகையழிபாவமென்

❋ நச்சத்தொடிந்நாற்பொருள்.

(௨)

புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சம்
❋ துய்க்குமிடத்தச்சந்தோன்றாமற்காப்பச்சம்
❋
எக்காலுமச்சந்தருமாலெவன்கொலோ
உட்கான்பிறனில்புகல்.

❋

(௩)

காணிற்குடிப்பழியாங்கையுறிற்கால்குறையும்
ஆணின்மைசெய்யுங்காலச்சமா நீணிரயத்
துன்பம்பயக்குமாற்றுச்சாரிநீகண்ட
❋
❋
❋
இன்பமெனக்கெனைத்தாற்கூறு.

(௪)

செம்மையொன் றின்றிச் சிறியாரினத்தராய்க் *
கொம்மைவரிமுலையாடோண்மரீஇயும்மை *
வலியாற் பிறர்மனைமேற்சென்றாரேயிம்மை *
அலியாகியாடியுண்பார். (௫)

௰அ பிறர்மனைநயவாமை.

பல்லாரறியப்பறையறைந்து நாட்கேட்டுக் *
கல்யாணஞ்செய்துகடிப்புக்கமெல்லியல்
காதன்மனையாளுமில்லாளாவென்றொருவன்
ஏதின்மனையாளைநோக்கு. * *
(௧)

அம்பலமலரெடுப்பவஞ்சித்தமர்பரீஇ *
வம்பலன்பெண்மரீஇமைந்துற்றுநம்பும் *
நிலைமையினெஞ்சத்தான்றுப்புரவுபாம்பின் *
தலைநக்கியன்னதுடைத்து. (௨)

பரவாவெளிப்படாபல்லோர்கட்டங்கா *

உரவோர்கட்காமநோயோகொடிதே
விரவாருணுப்படலஞ்சியாதும்
உளோயாதுள்ளாறிவிடும்.

*

*

(அ)

அம்புமழலுமவிர்கதிர்ஞாயிறும்

* வெம்பிச்சுடினும்புறஞ்சுடும்வெம்பிக்

*

கவற்றிமநத்தைச்சுடுதலாற்காமம்
அவற்றினுமஞ்சப்படும்.

*

(கூ)

ஊருளெழுந்தவுருகெழுசெந்தீக்கு *
நீருட்குளித்துமுயலாகுநீருட் *
குளிப்பினுங்காமஞ்சுடுமேகுன்றேறி *
ஒளிப்பினுங்காமஞ்சுடும். (ய)

பிரம்மனேநயவாஜம - முற்றிற்று.—அ கூய.

இல்லாவிடத்துமியைந்தவளவினால் *
உள்ளவிடம்போற்பெரிதுவந்துமெல்லக் *
கொடையொடுபட்டகுணனுடைமாந்தர்க் *
கடையாவாமாண்டைக்கதவு. (௧)

முன்னரோசாநாண்முனிதக்கமூப்புள *
பின்னரும்பீடழிக்குநோயுளகொன்னே *
பரவன்மின்பற்றன்மின்பாத்துண்மின்யாதுங் *
கரவன்மின்கைத்துண்டாம்போழ்து. (௨)

நடுக்குற்றுத்தற்சேர்ந்தார்துன்பந்துடையார் *
கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டும் *

இடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம்

* விடுக்கும்வினையுலந்தக்கால்.

(௩)

இம்மியரிசித்துணையானும்வைகலும்
நும்மிலியைவகொடுத்துண்மினும்மைக்

*
*

கொடாஅதவரென்பர் குன்டுநீர்வையத்
தடாஅவடுப்பினவர்.

(சூ)

மறுமையுமிம்மையு நோக்கியொருவற் *
குறுமாறியைவகொடுத்தல்வறுமையால் *
ஈதலிசையாதெனினுமிரவாமை *
ஈதலிரட்டியுறும். (ரு)

உ௰ ஈ ஊ க.

நடுவூருள்வேதிகைச்சுற்றுக்கோட்புக்க *
படுபனையன்னர்பலர்நச்சவாழ்வார் *
குடிகொழுத்தக்கண்ணுங்கொடுத்துண்ணாமாக்கள் *
இடுகாட்டுளேற்றுப்பனை. (சா)

பெயற்பான்மழைபெய்யாக்கண்ணுமுலகம்
* செயற்பாலசெய்யாவிடினுங்கயப்புலால்
*

புன்னைகடியும்பொருகடற்றண்சேர்ப்ப
என்னையுலகுய்யுமாறு.

*
(௭)

ஏற்றகைமாற்றாமையென்னாதார்தாம்வரையா

*

தாற்றாதார்க்கீவதாமாண்கடனாற்றின்
மலிகடற்றண்சேர்ப்பமாறீவார்க்கீதல்
பொலிகடனென்னும்பெயர்த்து.

*
*
(௮)

இறப்பச்சிறிதென்னாதில்லென்னாதென்று

*

மறப்பயன்யார்மாட்டுஞ்செய்கமுறைப்புதவின் *
ஐயம்புகூஉந்தவசிகடிஞைபோல் *
பையநிறைத்துவிடும். (௯)

கடிப்பிடுகண்முரசங்காதத்தோர்கேட்பர் ✽
இடித்துமுழங்கியோர்யோசனையோர்கேட்பர் ✽
அடுக்கியமூவுலகுங்கேட்குமேசான்றோர் ✽
கொடுத்தாரெனப்படுஞ்சொல். (௰)

ஈகை - முற்றிற்று — அ௨ ரு.

பழவினை உக

புல்லாவுளைத்துவிடினுங்குழக்கன்று ✽

வல்லதாந்தாய்நாடிக்கோடலைத்தொல்லைப்
பழவினையுமன்னதகைத்தேதற்செய்த

✽
✽

கிழவனைநாடிக்கொளற்கு. (௧)

உருவுமிளமையுமொண்பொருளுமுட்கும்
ஒருவழிநில்லாமைகண்டொருவழி
✽

*

ஒன்றேயுமில்லாதான்வாழ்க்கையுடம்பிட்டு

* நின்றுவீழ்ந்தக்கதுடைத்து.

(உ) வளம்படவேண்டாதாரியார்யாருமில்லை

*. அளந்தனபோகமவரவராற்றான்

*

விளங்காய்த்திரட்டினாரில்லைக்களங்கனியைக்
காரெனச்செய்தாருமில்.

*

(௩)

உறற்பாலநீக்கலுறுவர்க்குமாகா
பெறற்பாலனையவுமன்னவாமாரி

* வறப்பிற்றருவாருமில்லையதனைச்

* சிறப்பிற்றணிப்பாருமில்..

*

(௪)

சினைத்துணையாகித்தந்தேசுள்ளடக்கிப்

*

புணைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர் *
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை *
வினைப்பயன் அல்லாற் பிற. (௫)

௨௨ பழவினை

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும் *
கல்லாதார் வாழ்வ தறிதிரேற் கல்லாதார் *
சேதனமென் னுமச் சேறகத்தின் மையால் *
கோதென்று கொள்ளாதாங் கூற்று. (௬)

இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம் அடம்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
*
*
*
முன்னை வினையாய் விடும்.
(௭)

அறியாருமல்லரறிவதறிந்தும்
பழியோடுபட்டவைசெய்தல்வளியோடி
*   நெய்தனறவுயிர்க்குநீள்கடற்றண்சேர்ப்ப
*   செய்தவினையான்வரும்.

*
(௮)

ஈண்டுநீர்வையத்துளெல்லாருமெத்துணையும் *
வேண்டார்மற்றியாவிழைபயனல்லவை *
வேண்டினும்வேண்டாவிடினுமுறற்பால *
தீண்டாவிடுதலரிது. (௯)

சிறுகாபெருகாமுறைபிறழ்ந்துவாரா *
உறுகாலத்தூற்றாகாவாமிடத்தேயாகும்
சிறுகாலைப்பட்டபொறியுமதனால்
இறுகாலத்தென்னைபரிவு.

*
*
(௰)

பழவினை - முற்றிற்று — அதி. ௫௰.

இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும்
*
வசையன்றுவையத்தியற்கைநசையழுங்க *
நின்றோடிப்பொய்த்தனிரைதொடீஇச்செய்ந்நன்றி *
கொன்றாரிற்குற்றமுடைத்து.
(க) தக்காருந்தக்கவரல்லாருந்தத்தந்நீர்மை
* எக்காலுங்குன்றலிலராவரக்காரம்
* யாவரோடின்னினுங்கையாதாங்கைக்குமாம்
* தேவரோடின்னினும்வேம்பு.
(உ)

காலாடுபோழ்திற்கழிகிளைஞர்வானத்து
மேலாடுமீனிற்பலராவரேலா
* விடரொருவருற்றக்காலீர்ங்குன்றநாட
*
*
தொடர்புடையேமென்பார்சிலர்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின் ❋
நடுவணதெய்த விருதலையு மெய்து ❋
நடுவணதெய்தாதா னெய்து முலைப்பெய் ❋
தடுவது போலுந் துயர். (௪)

நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉம் ❋
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும் ❋
புல்லீரப் போழ்தி னுழவே போன் மீதாடிச் ❋
செல்லாவா நல்கூர்ந்தார் சொல். (௫)

உ௪ மெய்ம்மை.

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
❋
மடங்காதா ரென்று மடங்கார் தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
❋
❋
கைப்பறாப் பேய்ச்சுரையின் காய்.

(௬)

நம்மையிகழ்வாரைத்தாமவரின்முன்னிகழ்க
❋ என்னையவரோடுபட்டதுபுன்னை
❋
விறற்பூங்கமழ்கானல்வீங்குநீர்ச்சேர்ப்ப
உறற்பாலயார்க்குமுறும்.
❋
(௭)

ஆவேறுருவினவாயினுமாபயந்த
❋ பால்வேறுருவினவல்லவாம்பால்போல்
❋
ஒருதன்மைத்தாகுமறநெறியாபோல்
உருவுபலகொளலீங்கு.
❋
(௮)

யாஅருலகத்தோர்சொல்லில்லார்தேருங்கால் ❋
யாஅருபாயத்தின்வாழாதார்யாஅர் ❋
இடையாகவின்னுதெய்தாதார்யாஅர் ❋
கடைபோகச்செல்வமுய்த்தார். (௯)

தாஞ்செய்வினையல்லாற்றம்மொடுசெல்வதுமற் ❋

றியாங்கணுந்தேரிற்பிரிதில்லையாங்குத்தாம்
போற்றிப்புனைந்தவுடம்பும்பயமின்றே
*
*
கூற்றங்கொண்டோடும்பொழுது.

மெய்ம்மை - முற்றிற்று—.௲ா௨௰.

(௰)

ஆக்கத்துட்டூங்கித்துறவின்கட்சேர்கலா,
மக்கட்பிணத்தசுடுகாடுதொக்க
விலங்கிற்கும்புள்ளிற்குங்காடேபுலன்கெட்ட
*
*
*
புல்லறிவாளர்வயிறு.

(௧)

இரும்பார்க்குங்காலராயேதிலார்க்காளாய்க்

கரும்பார்கழனியுட்சேர்வர்சுரும்பார்க்கும்
* காட்டுளராய்வாழுஞ்சிவலுங்குறும்பூழும்
*
*
கூட்டுளாய்க்கொண்டுவைப்பார்.
(உ)

அக்கேபோலங்கையொழியவிரலழுகித்
துக்கத்தொழுநோயெழுபவேயக்கால்
*
*
அலவனைக்காதலித்துக்கான்முரித்துத்தின்ற
* பழவினைவந்தடைந்தக்கால்.
(௩)

நெருப்பழற்சேர்ந்தக்கானெய்போல்வதூஉம் *
எரிப்பச்சுட்டெவ்வநோயாக்கும்பரய்பக் *
கொடுவினையராகுவர்கோட்டாருங்கோடிக் *
கடுவினையராகியார்ச்சார்ந்து. (௪)

பெரியவர்கேண்மைபிறைபோலநாளும்
வரிசைவரிசையாநந்தும்வரிசையால்
வானூர்மதியம்போல்வைகலுந்தேயுமே
தானேசிறியார்தொடர்பு.

(ரு)

சான்றோரெனமதித்துச்சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச்
சான்றாண்மைசார்ந்தார்கணில்லாயிற்சார்ந்தோய்கேள்
சாந்தகத்துண்டென்றுசெப்புத்திறந்தொருவன்
பாம்பகத்துக்கண்டதுடைத்து. (சா)

யாஅரொருவரொருவர்தம்முள்ளத்தைத்
தேருந்துணைமையுடையவர்சாரற்
கநமணிநின்றிமைக்குநாடகேண்மக்கள்
மநம்வேறுசெய்கையும்வேறு. (எ)

உள்ளத்தானுள்ளாதுறுதித்தொழிலராய்க்

கள்ளித் தாணட்டார்கழிகேண்மைதெள்ளிப் ❋
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட ❋
மனத்துக்கண் மாசாய் விடும். (௮)

ஒக்கிய வொள்வாட்டன் னொன்னார்கைப் பட்டக்கால் ❋
ஊக்கமழிப்பதூஉ மெய்யாகு மாக்கம் ❋
இருமையுஞ் சென்றுசுடுதலா னல்ல ❋
கருமமே கல்லார்கட் டேர்வு.

(௯)

மனைப்பாசங் கைவிடா யிமக்கட் கொன்றீங்கி

❋

எனைத்தாழி வாழ்தியோ நெஞ்சே யெனைத்தும் ❋
சிறுவரையே யாயினுஞ் செய்த நன்றல்லால் ❋
உறுபயனே யில்லை யுயிர்க்கு. (௰)

அறத்துப்பால் முற்றிற்று — ஆக ௱௩௰.

பொருட்பால் கல்வி. ௨௯

குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்லநெஞ்சத்து
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையால்

✻

✻

✻

கல்வியழகேயழகு.
(ங)

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றால்

✻

தம்மைவிளக்குமாற்றாமுளராக்கேடின்றால்
எம்மையுலகத்தும்யாங்காணேங்கல்விபோல்

✻

✻

மம்மரறுக்குமருந்து.

(உ)

களர்நிலத்துப்பிறந்தவுப்பினைச்சான்றோர்
விளைநிலத்துநெல்லின்விழுமிதாக்கொள்வர்

✻

✻

கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்.

(௩)

வைப்புழிக்கோட்படாவாய்த்தீயிற்கேடில்லை
மிக்கசிறப்பினரசர்செறினவ்வவ்வார்
எச்சமென்றொருவன்மக்கட்குச்செய்வன
இச்சைமற்றல்லபிற. (௪)

கல்விகரையிலகற்பவர்நாள்சில
மெல்லநினைக்கிற்பிணிபலதெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடையகற்பவேநீரொழியப்
பாலுண்குருகிற்றெரிந்து.

(௫) உஅ பொருட்பால்கல்வி.

தோணியியக்குவான்றொல்லைவருணத்துக்
காணிற்கடைப்பட்டானென்றிகழார்காணு
மவன்றுணையாவாறுபோயற்றேநூல்கற்ற

*

மகன்றுணையா நல்லகொளல்.

(௬)

தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையார்
இகலிலரெஃகுடையார்தம்முட்குழீஇ
நகலினினிதாயிற்காண்பாமகல்வானத்

*

*

*

தும்பருறையார்பதி.

(௭)

கனைகடற்றண்சேர்ப்பகற்றறிந்தார்கேண்மை

*

நுனியிற்கரும்புதின்றற்றேநுனிநீக்கித்
தூரிற்றின்றன்னதகைத்தரோபண்பிலா
ஈரமிலாளர்தொடர்பு.

*

*

(௮)

கல்லாரேயாயினுங்கற்றாரைச்சேர்ந்தொழுகின் *
நல்லறிவு நாளுந்தலைப்படுவர்தொல்சிறப்பின் *
ஒண்ணிறப்பாதிரிப்பூச்சேர்தலாற்புத்தோடு *
தண்ணீர்க்குத்தான்பயந்தாங்கு. (௯)

அலகுசால்கற்பினறிவுநூல்கல்லா *
துலகநூலோதுவதெல்லாங்கலகல *
கூஉந்துணையல்லாற்கொண்டுதடுமாற்றம் *
போஒந்துணையறிவாரில். (௰)

பொருட்பாற்கல்வி முற்றிற்று — ஆ௱௪௰.

குடிப்பிறப்பு. ௨௯

உடுக்கையுலறியுடம்பழிந்தக்கண்ணுங் *
குடிப்பிறப்பாளர்தங்கொள்கையிற்குன்றார் *
இடுக்கண்டலைவந்தக்கண்ணுமரிமா *
கொடிப்புற்கறிக்குமோமற்று. (௧)

சான்றாண்மைசாயலொழுக்கமிவைமூன்றும் *
வான்றோய்குடிப்பிறந்தார்க்கல்லதுவான்றோயும் *
மைதவழ்வெற்பபடாஅபெருஞ்செல்வம் *
எய்தியக்கண்ணும்பிறர்க்கு. (௨)

இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று.

(௩)

நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு மெல்லாம்
உணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணருமொ ருவர்க்கெனின். (௪)

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச மெல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந்தார். (௫)

இனநன்மையின்சொலொன்றீதன்மற்றேனை
மனநன்மையென்றிவையெல்லாங்கனமணி
முத்தோடிமைக்குமுழங்குவரித்தண்சேர்ப்ப

※

※

※

விற்பிறந்தார்கண்ணேயுள.

(௬)

செய்கையழிந்துசிதன்மண்டிற்றாயினும்
பெய்யாவொருசிறைபேரிலுடைத்தாகும்

※ எவ்வமுழந்தக்கடைத்துங்குடிப்பிறந்தார்

※ செய்வர்செயற்பாலவை.

※

(௭)

ஒருபுடைபாம்புகொளினுமொருபுடை

※

அங்கண்மாஞாலம்விளக்குறூஉந்திங்கள்போல்
செல்லாமைசெவ்வனேர்நிற்பினுமொப்புரவில்

※

*

கொல்கார் குடிப்பிறந்தார்.

(௮) செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
* செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர் புல்வாய்
* பருமம்பொறுப்பினும் பாய்பரிமா போல்
* பொருமுரணாற்றுதலின்று.

(௯)

எற்றொன்றுமில்லாவிடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற்சேர்ந்தார்க்கசைவிடத்தூற்றாவர்
*
* அற்றக்கடைத்து மகல்யாறகழ்ந்தக்கால்
*
தெற்றெனத் தெண்ணீர்படும்.

குடிப்பிறப்பு முற்றிற்று — [illegible].

(௰)

மேன்மக்கள். ௬௧

ஆங்கண் விசும்பினகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃதாற்றார் தெருமந்து

*
*
*
தெய்வரொருமாசுறின்.
(க)

இசையுமெனினுமிசையாதெனினும் *
வசைதீரவெண்ணுவர்சான்றோர்விசையின் *
அரிமாவுளங்கிழித்தவம்பினிற்றீதோ *
அரிமாப்பிழைப்பெய்தகோல். (உ)

நரம்பெழுந்துநல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர் *
குரம்பெழுந்துகுற்றங்கொண்டேறாரங்கவரு *
உள்ளமெனுநாரினாற்கட்டியுளவனாயால் *
செய்வர்செயற்பாலவை. (ங)

செல்வுழிக்கண்ணொருநாட்காணினுஞ்சான்றவர் *
தொல்வழிக்கேண்மையிற்றோன்றப்புரிந்தியாப்பர் *
நல்வரைநாட்டசிலநாளடிப்படில் *
கல்வரையுமுண்டாநெறி. (ச)

புல்லாவெழுத்திற்பொருளில்வறுங்கோட்டி, *
கல்லாவொருவனுரைப்பவுங்கண்ணோடி

நல்லார்வருந்தியுங்கேட்பரேமற்றவன்

* பல்லாருணாணல்பரிந்து.
(௫)

௫௨ மேன்மக்கள்.

கடித்துக்கரும்பினைக்கண்டகர நூறி *
இடித்துநீர்கொள்ளினுமின்சுவைத்தேயாகும் *
வடுப்படவைதிறந்தக்கண்ணுங்குடிப்பிறந்தார் *
கூறார்தம்வாயிற்சிதைந்து. (௬)

கள்ளார்கள்ளுண்ணார்கடிவகடிந்தொரீஇ *
எள்ளிப்பிறரையிகழ்ந்துரையார்தள்ளியும் *
வாயிற்பொய்கூறார்வடுவறுகாட்சியார்
* சாயிற்பரிவதிலர்.

(௭) பிறர்மறையின்கட்செவிடாய்த்திறனறிந்
*
தேதிலாரிற்கட்குருடனாய்த்தீய
புறங்கூற்றின்மூகையாய்நிற்பானேல்யாதும்
அறங்கூறவேண்டாவவற்கு.

*

*

(௮)

பன்னாளுஞ்சென்றக்காற்பண்பிலார்தம்முழை *
என்னானும்வேண்டுபவென்றிகழ்பவென்னானும் *
வேண்டினுநன்றுமற்றென்றுவிழுமியோர் *
காண்டொறுஞ்செய்வர்சிறப்பு. (௯)

உடையாரிவரென்றொருதலையாப்பற்றிக் *
கடையாயார்பின்சென்றுவாழ்வருடைய *
பிலந்தலைப்பட்டதுபோலாதேநல்ல *
குலந்தலைப்பட்டவிடத்து. (௰)

மேன்மக்கள்முற்றிற்று. அ௨.ாஎய:

பெரியாரைப்பிழையாமை.

௧௭

பொறுப்பவென்றெண்ணிப்புரைதீர்ந்தார்மாட்டும் *
வெறுப்பனசெய்யாமைவேண்டும்வெறுத்தபின் *
ஆர்க்குமருவியணிமலைநன்னாட
பேர்க்குதல்யார்க்குமரிது.
*
(௧)

பொன்னைக்கொடுத்தும்புணர்தற்கரியாரைக்
கொன்னைதலைக்கூடப்பெற்றிருந்துமன்னோ
பயனில்பொழுதாக்கழிப்பரோ நல்ல
நயமிலறிவினவர்.

(௨)

அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு
மிசைமக்களான்மதிக்கற்பால நயமுணராக்

கையறியாமாக்களிழிப்புமெடுத்தேத்தும்
வையார்வடித்தநூலார்.

(௩)

விரிநிறநாகம்விடருளதேனும்
உருமின்கடுஞ்சினஞ்சேணின்றுமுட்கும்
அருமையுடையவரன்சேர்ந்துமுய்யார்
பெருமையுடையார்செறின். (௪)

எம்மையறிந்திலிரெம்போல்வாரில்லென்று
தம்மைத்தாஞ்சொல்வதுகோளன்றுதம்மை

அரியரா நோக்கியறனறியுஞ்சான்றோர்
பெரியராக்கொள்வதுகோள்
(௫)

௧௪ பெரியாரைப்பிழையாமை.

நளிகடற்றண்சேர்ப்பநாணிழற்போல
விளியுஞ்சிறியவர்கேண்மைவிளிவின்றி
அல்குநிழற்போலகன்றகன்றோடுமே
தொல்புகழாளர்தொடர்பு. (௬)

முன்னர்திருவுமகளிரெழினலமும்
துன்னியார்துய்ப்பர்தகல்வேண்டாதுன்னிக்
குழைகொண்டுதாழ்ந்தகுளிர்மரமெல்லாம்
உழைதங்கட்சென்றார்க்கொருங்கு. (௭)

தெரியத்தெரியுந்தெரிவிலார்கண்ணும்
பிரியப்பெரும்படர்நோய்செய்யும்பெரிய
உலவாவிருங்கழிச்சேர்ப்பயார்மாட்டும்
கலவாமைகோடியுறும்.

❋ கல்லாதுபோகியநாளும்பெரியவர்கட்
(அ) செல்லாதுவைகியவைகலுமொல்வ
❋ கொடாஅதொழிந்தபகலுமுரைப்பிற்
❋ படாஅவாம்பண்புடையார்கண்.

❋
(க)

பெரியார்பெருமைசிறுதகைமையொன்றிற் ❋
குரியாருரிமையடக்கந்தெரியுங்கால், ❋
செல்வமுடையாருஞ்செல்வரோதற்சேர்ந்தார் ❋
அல்லல்களைபவெனின். (௰)
பெரியாரைப்பிழையாமை முற்றிற்று—ஆக ௱எ௰.

நல்லினஞ்சேர்தல். ௰௮

அறியாப்பருவத்தடங்காரோடொன்றி, ❋
நெறியல்லசெய்தொழுகியவ்வுநெறியறிந்த ❋
நற்சார்வுசாரக்கெடுமேவெயின்முறுகப் ❋
புற்பனிப்பற்றுவிட்டாங்கு. (க)

அறிமினறநெறியஞ்சுமின்கூற்றம் ❋

பொறுமின்பிறர்கடுஞ்சொற்போற்றுமின்வஞ்சம் *
வெறுமின்வினைதீயார்கேண்மையெஞ்ஞான்றும் *
பெறுமின்பெரியார்வாய்ச்சொல். (உ)

அடைந்தார்ப்பிரிவுமரும்பிணியுங்கேடும் *
உடங்குடம்புகொண்டார்க்குறலாற்றொடங்கிப் *
பிறப்பின்னாதென்றுணரும்பேரறிவினாரை *
உறப்புணர்கவம்மாவென்னெஞ்சு. (ங)

இறப்பநினையுங்காலின்னாதெனினும் *
பிறப்பினையாருமுனியார்பிறப்பினுள் *
பண்பாற்றுநெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்றும் *
நண்பாற்றிநட்கப்பெறின். (ச)

ஊரங்கணநீருரவுநீர்ச்சேர்ந்தக்கால் *
பேரும்பிறிதாகித்தீர்த்தமாமோரும் *
குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர் *
நலமாட்சிநல்லாரைச்சார்ந்து. (ரு)

[illegible] நல்லினஞ்சேர்தல்.

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய்
அங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉங்
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர்
குன்றன்னார்கேண்மைகொளின். (௬)

பாலொடளாயநீர்பாலாகுமல்லது
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்தேரில்
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல
பெரியார்பெருமையைச்சார்ந்து. (௭)

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபுல்
ஒல்காவேயாகுமுழவருழப்படைக்கு
மெல்லியரேயாயினுநற்சார்வுசார்ந்தார்மேல்
செல்லாவாஞ்செற்றார்சினம். (௮)

நிலநலத்தான நந்தியநெல்லேபோற்றத்தம் *
குலநலத்தாலாகுவர்சான்றோர்கலநலத்தைத் *
தீவளிசென்றுசிதைத்தாங்குச்சான்றாண்மை *
தீயினஞ்சேரக்கெடும். (௬)

மனத்தான்மறுவிலரேனுந்தாஞ்சேர்ந்த *
இனத்தாலிகழப்படுவர்புனத்து *
வெறிகமழ்சந்தநமும்வேங்கையும்வேமே *
எறிபுனந்தீப்பட்டக்கால். (௭)

நல்லினஞ்சேர்தல்முற்றிற்று. ஆ௨ாஅம.

பெருமை. ருள

ஈதலிசையாதிளமைசேணீங்குதலால்

காதலவருங்கருத்தல்லர்காதலித்
தாதுநாமென்னுமவாவினைக்கைவிட்டுப்
* போவதேபோலும்பொருள்.

*

*

(௧)

இற்சார்வினைமாற்றேதீங்கமைந்தேமென்றெண்ணி
பொச்சாந்தொழுகுவர்பேதையார்ச்சார்வு [ப்
நின்றனபோன்றுநிலையாவெனவுணர்ந்தார் *
என்றும்பரிவதிலர்.

(௨)

மறுமைக்குவித்துமயலின்றிச்செய்து *
சிறுமைப்படாதேநீர்வாழ்மினறிஞராய் *
நின்றுழிநின்றேநிறம்வேறுங்காரணம் *
இன்றிப்பலவுமுள. (௩)

உறைப்பருங்காலத்துமூற்றுநீர்க்கேணி *
இறைத்துணினூமூராற்றுமென்பர்கொடைக்கடனும்
சாஅஅயக்கண்ணும்பெரியார்போன்மற்றையார் *
ஆஅஅயக்கண்ணுமரிது. (௪)

உறுபுனறந்துலகூட்டியறுமிடத்தும் *
கல்லூற்றுழியூறுமாறேபோற்செல்வம். *
பலர்க்காற்றிக்கெட்டுலர்ந்தக்கண்ணுஞ்சிலர்க்காற்றிச்
செய்வர்செயற்பாலவை. (௫)

௩௮ பெருமை.

பெருவரை நாட பெரியார்கட் டீமை *
கருநரைமேற் சூடேபோற் றோன்றுங் கருநரையைக் *
கொன்னன்ன வின்னாசெயினுஞ் சிறியார்மேல் *
ஒன்றானுந் தோன்றா கெடும். (௬)

இசைந்த சிறுமையியல்பிலாதார்கட் *
பசைந்த துணையும்பரிவாமசைந்த *
நகையேயும்வேண்டாத நல்லறிவினார்கட்
பகையேயும்பாடுபெறும்.
*
(௭)

மெல்லிய நல்லாருண் மென்மையதுவிறந் *
தொன்னாருட் கூற்றுட் கூற்றுடைமையெல்லாம் *
சலவருட்சாலச்சலமே நலவருள் *
நன்மைவரம்பாய்விடல். (௮)

கடுக்கியொருவன் கடுங்குறளைபேசி *
மயக்கிவிடினுமனப்பிரிப்பொன்றின்றித் *
துளக்கமிலாதவர் தூயமனத்தார்
விளக்கினுளொண்சுடரேபோன்று.
*

(௯)

முற்றுக்துற்துத்தினைநாளுமறஞ்செய்து *
பிற்றுக்துக்துக்துவர்சான்றவரத்தித்து *
முக்குற்றநீக்கிமுடிபுமறவெல்லாம் *
துக்கத்துணீக்கிவிடும். (௫)

டெருமை-முற்றிற்று—ஆ ௫௯௰.

தாளாண்மை. ௫௯

தோளாற்றக் கொள்ளாக் குலத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளிவதுண்டுகிளைகளோதுஞ்சவ [போல்
வாளாடுகூர்த்தியர்கண்போற்றடுமாறும் *
தாளாளர்க்குண்டோதவறு. (௧)

ஆடுகோடாகியதரிடைநின்றதூஉம் *
காழ்கொண்டகண்ணேகளிறணைக்குங்கந்தாகும் *
வாழ்தலுமன்னதகைத்தேயொருவன்றான் *
தாழ்வின்றித்தன்னைச்செயின்.
(௨)

உறுபுலியூனிரையின்றியொருநாள்
சிறுதேரைபற்றியுந்தின்னும்றிவினால்
காற்றொழிலென்றுகருதற்ககையினான்

*
*
*

மேற்றொழிலுமாங்கேமிகும்.

(௩)

இசையாதெனினுமியற்றியோராற்றால் *
அசையாதுநிற்பதாமாண்மையிசையுங்கால் *
கண்டறிரையலைக்குங்கானலந்தண்சேர்ப்ப *
பெண்டிரும்வாழாரோமற்று. (௪)

நல்லகுலமென்றுந்தீயகுலமென்றும் *
சொல்லளவல்லாற்பொருளில்லைத்தொல்சிறப்பின் *
ஒண்பொருளொன்றோதவங்கல்வியாள்வினை *
என்றிவற்றானேகுலம். (௫)

ஆற்றுந் துணையு மறிவினையுள் ளடக்கி ❋
ஊக்க முடையா ருணர்வுடையா ருக்கும் ❋
உறுப்பினா லாராயு மொண்மை யுடையார் ❋
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. (௬)

சிதலைதினப் பட்ட வாலமரத்தை ❋
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக் ❋
குதலைமைத் தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற ❋
புதல்வன் மறைப்பக் கெடும். (௭)

ஈநமா யில்லிருந் தின்றி விளியினும் ❋
மானந் தலைவருவ செய்யவோ யானை ❋
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள் ❋
அரிமா மதுகை யவர். (௮)

தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி ❋
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங் கோங்கும் ❋
உயர்குடியுட் பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. [illegible] - [illegible] - 36 (௯)

பெருமுச்தாயர்பெரிதுவந்தீயும் *
கருனைச்சேரிமூர்வர்கயவர்கருனையைப் *
பேருமறியார்நனிவிரும்புதாளாண்மை *
நீருமமிழ்தாய்விடும். (அ-க-37) (ஶ)

தாளாண்மைமுற்றிற்று—அதி உா.

யாவும்வருத்தமுமீன்றக்கானேவும்
கவாஅன்மகற்கண்டுதாய்மறந்தாஅம்
*
* கசாஅத்தானுற்றவருக்குமுசாஅத்தனீ
* கேளிளாக்காணக்கெடும்.
(க)

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லாம்
*
நிழன்மரம்போனேரொப்பத்தாங்கிப்பழுமரம்போ
பல்லார்பயன்றுய்ப்பத்தான்வருந்திவாழ்வதே
[ல் நல்லாண்மகற்குக்கடன்.

(உ)

அடுக்கன்மலைநாடதற்சேர்ந்தவரை
❋ எடுக்கலமென்னார்பெரியோரடுத்தடுத்து
❋ வன்காய்பலபலகாய்ப்பினுமில்லையே
❋ தன்காய்பொறுக்கலாக்கொம்பு.

(ங)

உலகறியத்தீரக்கலப்பினுநில்லா
❋
சிலபகலாஞ்சிற்றினத்தார்கேண்மை நிலைதிரியா
நிற்கும்பெரியோர்நெறியடையநின்றனைத்தால்
❋
❋
ஒற்கமிலாளர்தொடர்பு.

(ச) இன்னாரினையயெமர்பிறரென்னுஞ்சொல்
❋
என்னுமிலராமியல்பினாற்றுன்னித்
தொலைமக்கடுன்பத்தீர்ப்பாரேயார்மாட்டும்
தலைமக்களாகற்பாலார்.

❋

(௫)

சஉ சுற்றந்தழால்.

பொற்கலத்துப்பெய்தபுலியுகிர்வான்புழுக்கல்
அக்காரம்பாலோடமரார்கைத்துண்டலின்
உப்பிலிப்புற்கையுயிர்போற்கிளைஞர்மாட்
டெக்கலத்தானுமினிது.

(௬)

நாள்வாய்ப்பெறினுந்தன்னள்ளாதாரில்லத்து
வேளாண்மைவெங்கருனைவேம்பாகுங்கேளாய்
அபராநட்போழ்தினடகிடுவரோனும்
தமராயார்மாட்டேயினிது.

முட்டிகைபோலமுனியாதுவைகலும் *
கொட்டியுண்பாருங்குறடுபோற்கைவிடுவர் *
சுட்டுக்கோல்போலவெரியும்புகுவரோ *
நட்டாரெனப்படுவார். (அ)

நறுமலர்த்தண்கோதாய்நட்டார்க்குநட்டார் *
மறுமையுஞ்செய்வதொன்றுண்டோவிறுமளவும் *
இன்புறுவதின்புற்றெழீஇயவரொடு *
துன்புறுவதுன்புறுக்கால். (கூ)

விருப்பிலாரில்லத்துவேறிருந்துண்ணும் *
வெருக்குக்கண்வெங்கருனைவேம்பாம்விருப்புடைத்
தன்போல்வாரில்லுட்டயங்குநீர்த்தண்புற்கை *
என்போடியைந்தவமிழ்து. (ய)

சுற்றந்தழால்-முற்றிற்று—ஆஉ உாய.

நட்பாராய்தல். சாகூ

